Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஉ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி வருடம் ஆவணி மீ கசஉ வெள்ளிக்கிழமை (30 AUGUST. 1957) [இல-உக]

அரசியல் அலை

## மொழிப் பிணக்கு முற்றாய் ஒழிந்துவிட்டதாம் .........!

---o---

### சிங்கப்பூரில் இலங்கைப் பிரதமரின் ஆனந்தக் கூத்து!

சிங்கப்பூர் சென்ற ஈழத்துப் பிரதமர் அங்கு முதல் முதலாகக் கொடுத்த அறிவிப்பில் "இலங்கையில் மொழிப் பிரச்சனை என்ற பேச்சுக்கு இடமேயில்லை அது தீர்ந்து விட்டது" என்று பெருமிதத்துடன் கூறியிருக்கின்றாராம்.

தமிழ் மொழி உபயோகச் சட்டதிட்டம் இன்னும் வெளியாகாதிருக்கவும் தனிச்சிங்களமே இலங்கையின் அரசவரிசை மொழியென்று திரும்பவும் திரும்பவும் சொல்லிக்கொண்டு ஆட்சியாளர் வீரம் பேசவும் திரு. பண்டாரநாயக மொழிப்பிணக்கு முடிந்துவிட்டது என்று கூறுவதற்கு துணிவு எங்கிருந்து பெற்றார்? தமிழகத்து மக்களுட் பெரும்பாலார் ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை என்பது வெளிப்படையாயிருக்கவும் முதலமைச்சர் இந்த வெற்றிச் சங்கநாதம் செய்வதற்குக் காரணம் உண்டு

பத்தேகம விமலவன்ச தேரோ இந்தஒப்பந்தத்தை வேறு காரணம் கொண்டு எதிர்க்கின்றார். அவருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மந்திரி தகநாயக என்ன சொல்கின்றார்? ஒப்பந்தத்தில் ஒரு அம்சமாவது சிங்களவர்களைக் கைவிடவில்லை என்பதைத் திரு. தகநாயக விளக்கிக் காட்டியிருப்பதன் உண்மை விளக்கம் என்ன?

## யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள்

### எங்கள் அன்பு வாழ்க்கைக்கு இடையூறாய் நிற்கின்றன

பண்டைக்காலந்தொட்டு இந்துசமயத்தையும் கலாசாரத்தையும் வளர்க்க மகான்கள் பரம்பரை பரம்பரையாகத் தோன்றியுள்ளார்கள், இவ்வாறு வேறெந்தச் சமயத்திலும் மகான்கள் தொடர்ச்சியாகத் தோன்றியதுமில்லைத் தோன்றப் போவதுமில்லை. சுவாமி விவேகானந்தர் இராமலிங்கசுவாமிகள் ஆறுமுகநாவலர், காந்திமகான் போன்றவர்கள் கல்வி அறிவிலும் சமய அறிவிலும் உலகப்பெரியார்களாக விளங்கினார்கள்.

அன்பும் சிவமும் இரண்டல்ல. அன்பாலேயே சமயமும் கலாசாரமும் உலகெங்கும் பாவி வருகின்றன. அன்பை வளர்க்கவே மனிதன் உலகில் பிறந்தான். மக்கள் மேல்வாழ்வு வாழ்தற்கு அன்பு அவசியம். வாயில் ஒன்று மனதில்ஒன்றாயிருக்கக்கூடாது அறமே கடவுள். அதைப் பற்றி நின்று வாழ்வதே அன்பு வாழ்க்கை. அன்பு வாழ்க்கைககு இடையூறாய்க் குறுக்கே நிற்பது யான் எனது என்னும் ஆணவம். இந்த ஆணவமே எல்லாத் துன்பங்களுக்குக் காரணம். எனவே இந்த ஆணவத்தை நாம் அடக்சி வாழ வேண்டும். அதுதான் மனிதப் பண்பு. "சிவம்" ஒரு தனிப் பரம்பொருள். இது எங்கும் உளது. இவ்வுண்மையை நாம் உணர வேண்டும். அன்பை அடிப்படையாகக் கொண்டு உலக மக்கள் வாழ வேண்டும் என்று கொழும்பு விவேகானந்த சபையில் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தா அவர்கள் பேசும்போது கூறினர்.

---

# நல்லூரின் அருட்காட்சி

## பல்துறைச் சிறப்புக்கள் தந்த பேருவகை

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் உற்சவம் சிறப்புக்கள் பல விளங்க நிகழ்ந்து நிறைவுற்றது. தீர்த்தோற்சவத்தன்று குறித்த சிறப்புக்களை இன்பம் ததும்பும உரைகளால் வானொலியில் விளக்கிழர் வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்ப்பாண மாநகரசபைத் தலைவர். அப்பேச்சின் சிலபகுதிகள் இங்கே காணவருகின்றன

கந்தவேள், வேள்முருகன், காங்கேயன் காதலித்து வந்த நல்லை என்று சான்றோரால் சிறப்பித்துக் கூறப்படும் நல்லூர்த் தலத்திலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானது தீர்த்தத் திருவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுவதாயிற்று. இருபத்துநாலு தினங்களாக நடைபெற்று வந்த திருவிழாக்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் விளங்கும் தீர்த்தத் திருவிழாவிலே கலந்துகொண்டுள்ள பக்தர் தொகையும், அவர்கள் தம் உள்ளங்களி லிருந்து ஊற்றெடுத்தோடும் பக்திப் பிரவாகமும் மட்டற்ற மகிழ்ச்சியைஉண்டுபண்ணுகின்றன.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால், அழுகையர், தொழுகையர், துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் எனப் பலதரப்பட்ட நிலைகளில் தம்மை மறந்து, கந்தப் பெருமானது புகழினைப் பாடியபடியே பக்திப் பரவசமாகி நிற்கும் மெய்யன்பர்களது தொகையும், நிலையும் எம்மையறியாமலே எம்முள்ளங்களில் ஒருவித மெய்யுணர்ச்சியை உண்டுபண்ணுவனவாக இருக்கின்றன. குமரேசரது தாளையும், சதங்கையையும், தண்டையையும், சண்முகத்தையும், தோளையும், கடம்பையும் மனக்கண்முன் கண்டு, நாள்என் செயும், வினைதான் என்செயும், எமைநாடிவந்த, கோள் என் செயும், கொடுங் கூற்றென் செயும் என்ற நம்பிக்கையுடன் அவன் நாமத்தையே ஓதிக்கொண்டிருப்போர் தொகை விண்மீன்களை விட எண்ணிலடங்காதனவாய்க் காணப்படுகின்றது. திருமுருகா என ஒருதரம் உச்சரித்த மாத்திரத்திலேயே உள்ளம் பரவசப்படுவோரும், செந்திற் குமரனது திருவோலக் காட்சியைக் கண்டபோதே நெஞ்சம் நெக்குருகுவோரும், ஆலயத்திலுள்ளோரும், ஆலய[illegible]பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரவசக் காட்சியைக் காண்கின்றோம்.

பொதுமக்களின் மனத்தை வலிதிற்கவர்ந்திழுக்கக்கூடிய விதத்தில் இவ்வாலய விழாக்களின்போது வேடிக்கை விநோதக் காட்சிகள் ஒன்றுமே இடம் பெறுவதில்லை. திருவிழாக்களின்போது வாணவேடிக்கைளோ, சதுர் அரங்கு, இசை அரங்குகளோ நடத்தப்படுவதில்லை. எனினும் பண்டைப் பெருமை வாய்ந்த முருகனின் திருஉலாக் காட்சியைத் தரிசிக்க வந்து குவிவோர் தொகை ஏராளம், ஏராளம். 'பொன் போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானல்' என்று கூறினுற்கூட உவமானப் பொருத்தம் சரியாக அமைய முடியாத கொடிய வெயிலில் கோவில் வீதிகளிலே அங்கப் பிரதிஷ்டை செய்வோர் தம் செயல், திருக்கைலாய மலையைக் காணும் ஆவலால் காலால் நடந்தும், கையால் தவழ்ந்தும், நிலத்தில் உருண்டும் சென்ற திருநாவுக்கரசரையும், அம்மையப்பனைக் காணும் விருப்பினால் தலைகீழாக நடந்துசென்ற காரைக்கால் அம்மையாரையும் எமக்கு ஞாபகமூட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

இருபத்தைந்து தினங்கள் வரை நடைபெறும் இவ்விழா சிறப்புடையதாகவும் ஒழுங்கானதாயும் அமைவதற்கு மாநகரசபையும், பாடிகாவலர் (பொலிஸ்) பகுதியும் பெரிதும் பங்கெடுத்து உழைத்திருக்கின்றன.

தனது நிலையிலுள்ள மற்றவர்கள் பின்பற்றக்கூடிய விதத்தில் நல்லூர்க் கந்தசுவாமிகோவில்நிர்வாகத்தினை நடாத்திவரும் நல்லூர்க் கந்தசுவாமிகோவில் முகாமைக்காரர் திரு சண்முகதாச மாப்பாண முதலியார் அவர்கள் இவ்விழாக் காலங்களில் பாடிகாவலர் நிலையத்துக்கும், மாநகரசபை அலுவலகத்துக்குப் தனது நிர்வாகத்துக்குட்பட்ட இடங்களை இலவசமாகத் தந்து உதவியது மாத்திரமன்றி, நாங்கள் எங்கள் பணியினைச் சிறப்பாகச் செய்து முடித்தற்கும் உதவிகளையெல்லாம் முழு மனத்துடன் செய்துதவியுள்ளார்.

எமது மாநகரசபை சுகாதாரம் வெளிச்சம் முதலிய விஷயங்களில் மிகுந்த சிரத்தை காட்டியதன் பயனாகவே எந்த விதமான சிறு நோய்கூட இவ்விழாக் காலங்களில் தரிசனத்துக்கு வந்த பொது மக்களுக்கு ஏற்படவில்லை.

தூய்மை, தூய்மை என்று நாம் வாயினல் பேசுவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அதனை நம் தினசரி வாழ்க்கையிலும் கடைப்பிடித்துப் பயன்பெறவேண்டும். 'இலங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோவில்' என்ற ஆன்றோர் வாக்கின்படி இறைவன் ஆலயங்களில் மாத்திரம் வீற்றிருக்கவில்லை, நாங்கள் வசிக்கும சிறு குடிசைகளிற்கூட அவர் வீற்றிருக்கிறார் என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு நாம் வசிக்கும் வீடுகளையெல்லாம் யாவரும் புனிதமாக வைத்திருக்க வேண்டும்.

---

### தாயுமான சுவாமிகள்

## அருண் மொழி

---0---

அறிவாகிய விளக்கு வரும்போது அவித்தையாகிய பொய்யிருள் இருந்த விடந்தானும் இல்லாது மறைந்தொழியும்; தேடினுமகப்படாது. அறிவாய் நின்றவிடத்து அறியாமை யேதுமில்லையென்று வேத வாக்கியங் கூறும். இக் கருத்தேபற்றித் தாயுமான சுவாமிகளும்,

"போத மென்பதே
விளக்கொவ்வும்
அவித்தை பொய்
யிருளாங்,
தீதிலா விளக்
கெடுத்திருள்
தேடவுஞ் சிக்கா
தாதலாலறி வாய் நின்ற
விடத்தறி யாமை
ஏதும் இல்லையென்
றெம்பிரான்
சுருதியே யியம்பும்"

என்று திருவாய்மலர்ந்தருளினர். அறிவைப் பெறின் அறியாமையும் அதன்வழிவந்த துன்பமும் உடன் நீங்குமாகலின் எப்பொருளினும் மிக்க அறிவுப் பொருளை விழைந்து தேடுதல் வேண்டும்.

—0—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹு ஆவணி மீ கச உ வெள்ளிக்கிழமை


## ஆட்சி நடை அழகு!

மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில், அமைச்சர்கள், உலகம் வலம் வரும் ஊர்க்குருவிகளாய் மாறிவிட்டார்கள். உள்ளூரிலே உரியமதிப்பு இல்லை என்று அல்லது சென்றவிடத்திற் சிறப்படைதல் சுலபமென்று சுற்றுலாவைத் தொடர்ந்து செய்கிறார்கள் மந்திரிமார்கள்? ஆட்சிப்பீடத்தமர்ந்து ஓராண்டுக்குள் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு எத்தனை முறை சென்றிருக்கிறார்கள் என்பதைப் பொதுசனம் ஆராய்ந்து பார்த்தால் அரசாங்கப் பொறுப்பேற்றவர்கள் இந்த வழியில் வீண்விரயஞ் செய்வதுமன்றி நாட்டின்பரிபாலனத்திலும் கவனஞ் செலுத்தாது விட்டார்கள் என்பதும் புலப்படும்.

ஆவணித் திங்களில் இங்கிலாந்து செல்ல முடியாதுநின்ற முதல் அமைச்சர் எந்த வகையிலாவது வெளிநாட்டுப் பயணம் செய்து முடித்துவிட வேண்டும் என்று மலாயாவுக்குச் சென்றிருக்கின்றார் ஆங்கு இந்நாட்டின் நிலைமையைப் பற்றிக்குறிப்பிடும்பொழுது இந்திரபோகமும் சுவர்க்கச் சுகமுமுடையதேசமாய் ஈழம்விளங்குவதற்குத் தாம் அரசியலுபாயத்தை உபயோகித்துப் பல பிணக்குகளைத் தீர்த்து வைத்தார் என்றுகட்டுக்கதைகளிலும் காணமுடியாத வெற்றுரைகளைப் பகர்ந்திருக்கின்றார். ஆட்சி முறையின் நடை அழகு இருந்தவாறென்னே!

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம உரிமை பெறுவதற்கு இலங்கையிலே கிளர்ச்சி முன்னிருந்ததிலும் பார்க்க வளர்ந்து வருவதென்பதை வெளிநாட்டார் அறியாதிருக்கும் வகையில் அன்னாருக்குத் திரு. பண்டாரநாயக இந்நாட்டைப் பற்றி எவ்விதமாகவும் எடுத்துரைத்து அவர்களின் பாராட்டைப் பெறுவது நூதனமன்று. உண்மையிலே இங்கே மொழிப் பிணக்கு ஒழிந்து விட்டதா என்ற கேள்விக்குத் திரு. பண்டாரநாயக தன் உள்ளத்தை ஆராய்ந்து உற்றுணர்ந்தபின் விடைபகர்வாரால் நிலைமையை உள்ளவாறு அறிய முடியும். 'நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகமில்லை' என்றுசொல்லுவார்கள் அறிஞர்கள் இலங்கையில் இனி மொழிப் பிணக்குக்கு இடமேயில்லை என்று அறுதியிட்டு உறுதிமொழி உரைக்கும் பிரதமரின் பெருந் தன்மையைப் பற்றிப் பேசவும் வேண்டுங்கொல்.

ஓயாது வாயாடுவதால் அரசியல் எதிர்ப்பை ஒழித்துவிடலாமென்றெண்ணிப்போலும்திரு பண்டாரநாயக சொற்பொழிவாற்றுவதிற் காலத்தைக் கழிக்கின்றார். கட்சிகளைக் கண்டனஞ் செய்யும் உரிமை யாருக்குமுண்டு ஆனல்ஆட்சியாளர்கள் எதிர்க் கட்சிகளைக் கண்டிப்பதற்கு அரசாங்க சாதனங்களைப் பயன்படுத்துதல் சனநாயக முறைக்குமுரணகுமன்றோ. கட்சிக் கூட்டநிகழ்ச்சிகளை வானெலி மூலம் பரப்புவது ஆட்சி முறைக்காகா தென்பதை முதலமைச்சர் அறியாதிருக்கமாட்டார் அறிந்தும் அவ்வித ஒழுங்குநெறியிற் பிறழ்ந்து நிற்கும் அமைச்சர் மக்கள் ஆட்சி நடத்துகிறார் என்று சொல்வது கபட நாடகமா அல்லது ஆணவத்தின் ஆற்றலா?

மொழி ஒப்பந்தத்தைச் சொல்லொன்று எண்ணமொன்று செயல் பிறதொன்று என்ற வகையிற் பொருள்பட விளக்கிக் கூறத்துணிந்த பிரதமர் சனநாயக ஆட்சி நடத்துகிறார் என்று கனவிலும் நினைக்க முடியாது. மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிமுறை எத்தன்மைத்தென்பதை மக்கள் நன்ருய் அறிந்து விட்டார்கள் ஆகையால் இனி [illegible] செய்வார்கள் திண்ணம்.

## திருமணம்

### குகமூர்த்தி — கமலேஸ்வரி

கோப்பாய்வாசியும் ஓய்வுபெற்ற ஆசிரியருமாகிய திரு. V. காசிலிங்கம் அவர்களின் புதல்வரும் இந்துசாதனக் கந்தோரில் உத்தியோகம் வகிக்கும் திரு. V. சண்முகநாதன் அவர்களின் மைத்துனரும்,கொழும்பு பகிரங்க வேலைப்பகுதியில் உத்தியோகம் வகிப்பவருமாகிய திருவளர் செல்வன் குகமூர்த்தி அவர்களுக்கும் ஒய்வுபெற்ற வித்தியாதரிசி திரு. S. R கனகசபை அவர்களின் புதல்வி திருவளர் செல்வி கமலேஸ்வரிக்கும், மணமகனில்லத்தில் நிகழும் ஆவணி மீ க0 உ (27-8-57) திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வரவேற்புக் கொண்டாட்டம் மணமகனில்லத்தில் புதன்கிழமை சிறப்பாக நடந்தது. கொண்டாட்டங்களுக்குப் பெரியார் பலர் சமுகமளித்தனர்.

தம்பதிகட்கு இறைவன் எல்லாச் செல்வங்களும் அளிப்பாராக.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### மலாயா இசுலாமிய மயமாகின்றதா ?

எத்தனையோ ஆண்டுகளாக இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டு அடிமையாயிருந்த மலாயா சுதந்தரம் பெறுகின்றதுண்மையெனினும் அந்நாடு ஒரு இசுலாமிய நாடாக அரசியற் சட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. சீனர்களும் இந்தியர்களும் ஏறக்குறைய நூற்றுக்கு ஐம்பதுக்குமேல் உள்ள தேசத்தில் மலாயர்களுக்குரிய சமயமே சமயமாகின்ற ஒழுங்கு சுதந்திரத்தைக் களங்கமுள்ளதாக்குகின்றது. ஒருவேளை இலங்கைப் பிரதமரின் யோசனையாயிருக்கக்கூடுமா ?

### தேரோவுடன் கல்விமந்திரி போராடுகின்றார்!

ஒப்பந்தத்தைப்பற்றித் தமிழகத்தில் ஒருவிதக் கவலை. தென் இலங்கையில் இன்னெரு கவலை. கூழுக்கு உப்பில்லையென்பாரும் உளர். பாலுக்குச் சீனியில்லையென்பாரும் உளர். அந்த விபரீதத்தைவிட இந்த ஒப்பந்த விபரீதம் வேடிக்கையாயிருக்கின்றது. திரு. தகநாயக வின் கருத்துப்படி தனிச்சிங்களச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்றுவிட்டார்கள். ஆகவே சிங்கள மக்களுக்கு இது மாபெரும் வெற்றியாகும். சமரசத்தின் அதிரசமான பகுதி இதுதான்!

### திருவுளமும் மந்திரியார் சித்தப்படி !

வீடுகட்டுவதற்கு அரசாங்கப் பண உதவி பெறுவதற்கு அநேகர் விண்ணப்பித்தபடியாலே திருவுளச்சீட்டுப் போட்டுச் சிலரைத் தெரிவு செய்தார்களாம். இந்தத் தெரிவில் மக்களாலே பாராளுமன்றத்துக்கு பரோபகாரத் தொண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு அங்கத்தவர் மந்திரியாகப் பிரதமராலே தெரிவு செய்யப்பெற்றவர் திருவுள மகிழ்ச்சி பெற்றிருக்கின்றாராம திருவுளச்சீட்டின் வெற்றி அல்ல — இந்த அரசாங்க உதவிக்கு மந்திரியாரும் மக்களுடன் சேர்ந்து விண்ணப்பஞ் செய்தமைதான் வியப்பாகின்றது.

## துன்பம் நீக்கும் வழி

உங்கள் மனைவி மக்களை நினைந்து வருந்த வேண்டாம். உயிர்களுக்கு அமைக்கப் பெற்றிருக்கும் விதி மாற்றப்படமாட்டாது. அப்படியே உங்கள் மனைவி மக்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் சுகதுக்கங்கள் பற்றிய பொறுப்பை இறைவன்பால் ஒப்படையுங்கள். துன்பப்படும் நோக்கத்துடன் இவ்வுலகில் நாம் வாழவில்லை. அமைதியாயிருந்து தொண்டு செய்தற்கே வாழுகின்றோம். ஆகையினலே மனைவி மக்களுக்கு வேண்டியவற்றைக் கவனமாகச் செய்யுங்கள். ஆனல் அவர்களைப்பற்றி நினைத்து வருத்தப்படாதீர்கள். இங்கே குறிப்பிட்ட உண்மையை மனத்திற் பதித்து துன்பங்களிலிருந்து நீங்கி இன்புற்று வாழுங்கள்.

— சுவாமி இராமதாசர்

# ஆன்மீக நெறியே கல்விப் பயன்

## அழகும் கவர்ச்சியும் நிறைந்த அன்பு வாழ்க்கை

"கலை அழகு மிக்கதாயும் ஆன்மீக நெறியைத் தழுவியதாகவும் வாழ்க்கை நடத்த வேண்டும். ஆன்மீக நெறி தழுவாது உலகச் செல்வத்தையெல்லாம் குவித்து வைத்துக்கொண்டு வாழ்வதால் ஒரு பயனுமில்லை". எந்தப் பணியையும் எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் தளரா உள்ள உறுதியுடன் ஊக்கம் குன்றாது செய்து முடிக்கும் ஆற்றலை இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"பல்கலைக் கழகப் பட்டம் பெற்று வாழ்க்கையில் பங்கேற்கும் இளைஞர்களும், நங்கையரும் தங்களுடைய முழு ஆற்றலையும் நாட்டின் நலனுக்குப் பயன்படுத்திப் பணியாற்றவேண்டும்; அது மட்டுமன்றி, நாட்டுக்கு நற்பணியாற்றவேண்டுமென்ற உணர்ச்சி சாதாரண குடிமகனுக்கும் ஏற்படுவதற்கு உகந்த சூழ்நிலையையும் இவர்களே உண்டாக்க வேண்டும்.

"நமது உழைப்பெல்லாம் நமது நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கே பயன்படுகிறது. நமது உழைப்பைச்சுரண்டி, அதனல் கிடைக்கும் செல்வத்தை வெளியே கொண்டு செல்லும் வெளிநாட்டுஏகாதிபத்தியம் மறைந்துவிட்டது இந்த உண்மையை நமது மக்களிலே ஒருசிலர் நீங்கலாகப் பெரும்பாலான சாதாரண மக்கள் உணரவில்லை என்றே தோன்றுகிறது. சென்ற உலகப் [illegible] [illegible] யணியும், யபபானும் இப்பொழுது புனரமைப்புச் செய்யப்பட்டு புத்துருப் பெற்று விளங்குகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? தனது நாட்டுச் செல்வத்தை வளர்க்கத்தான் பாடுபட வேண்டுமென ஒவ்வொரு உழைப்பாளியும் உணருகிறான். அந்த உணர்ச்சிதான் அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணம். அதே உணர்ச்சி நமது நாட்டுத் தொழிலாளர்க்கும் ஏற்படவேண்டும்". பெரிய திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்குப் பணம் அவசியந்தான். ஆனல் பணம் மட்டுமே போதுமென்று கூறிவிட முடியாது. ஏனெனில் ஒரு திட்டத்தின் இறுதி வெற்றி மக்களின் ஒத்துழைப்பை குறிப்பாக அத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஒத்துழைப்பையே பொறுத்தது".

உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அழகு பொதிந்து விளங்க வேண்டுமென விரும்புகிறேன். உங்களிலே சிலர் எழுத்தாளர்களாகச் செல்லலாம்; சிலர் மிகப் பெரிய பதவிகளை அடையலாம்; மற்றுஞ் சிலர் பெரிய தொழிலதிபர்களாக ஆகலாம். எப்படி ஆனலும், உங்களுடைய வாழ்க்கை அழகும் கவர்ச்சியும் நிறைந்ததாக விளங்கும். ஏராளமான பணம் இருந்தாலேயே அழகு நிறைந்த வாழ்க்கை நடத்த முடியுமென நினைப்பது அறியாமை. அழகு உணர்ச்சியை வளர்ப்பதற்குப் பணம் செலவிட வேண்டியதில்லை.

"ஆன்மீக நெறியைப் போற்றி அந்நெறிப்படி நீங்கள் ஒழுகவேண்டும். ஆன்மீக வாழ்க்கையை உதறிவிட்டு உலகச் செல்வங்களையெல்லாம் குவித்து வைத்துக்கொண்டு வாழும் வாழ்க்கை பயனற்றது; செல்லாக் காசுகூடப்பெறுதது. ஆன்மீக நெறி தழுவாத வாழ்க்கை மிருக வாழ்க்கையை விடக் குறைந்தது. ஆன்மீக நெறியைப் போற்றி ஒழுகுதல் என்பதற்குப் பொருள், சமய வேடம் தரித்துக்கொண்டு வாழ்வதுஎன்பதன்று.கொடிய வாழ்வு நடத்தாமல் அன்பு வாழ்க்கை நடத்த வேண்டும்; தன்னலமற்ற தியாக வாழ்வுநடத்தவேண்டும். அதுதான் ஆன்மீக வாழ்க்கை என்பதன் பொருள். மனித வாழ்க்கையின் உயர்ந்த பேருண்மைகளை அடிப்படையாகக் கொண்டது ஆன்மீகநெறி.

"அமைதியையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க நீங்கள் ஒவ்வொருவ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## திருவிளையாடற் புராணம்

(முற்றொடர்—4)

பாணபத்திரன் திருவஞ்சைக் களத்தை யடைந்து ஒரு தண்ணீர்ப் பந்தலில் இருந்தான். பாணபத்திரன் வரவைச் சிவபெருமான் சேரமானுக்குத் தெரிவித்தருளினார். சிவனருள் பெற்ற பாணபத்திரனைச் சேரமான் ஏவலாளர்கள்மூலம் தேடிக் கண்டு பிடித்து வணங்கினார். பல உபசாரங்கள் புரிந்து அன்பு செய்தார். ஆபரணம் திரவியம் சிவிகை பீதாம்பரம், யானை, குதிரை முதலியன வேண்டுமட்டுங் கொடுத்தார்.

பாணபத்திரன் மதுரைக்கு மீண்டு முன்போலச் சோமசுந்தரரை வணங்கிக்கொண்டு குபேரனைப்போல வாழ்ந்திருந்தான்.

### திருமுகங் கொடுத்த படலம்

அடுத்தது திருமுகங்கொடுத்த படலத்திலேயுள்ள செய்யுள். இந்தச் செய்யுளைப் பாடியது யார்? (சிவபெருமான்) யாருக்குப் பாடிக்கொடுத்தார்? (பாணபத்திரனுக்கு)யாரிடத்திற்கு அனுப்பினார். (சேரமானிடத்துக்கு) ஏன் அனுப்பினார். (பாணபத்திரனுக்கு வேண்டிய பொருள் பெற்றுக்கொடுக்கும் பொருட்டாக.) சரி; செய்யுளை வாசியும் பார்ப்போம்.

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிசிறகு
அன்னம் பயில் பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழி தரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்ச்
செருமாவுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ் பயில் பாண பத்திரன்
தன்போலென் பாலன் பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே."

செய்யுளின் பொருளைக் கவனியுங்கள்.

மதிமலி புரிசை மாடக் கூடற்பதி நுண்ணுணர்வு மிகுந்த மதில்சூழ்ந்த நான்மாடக்கூடலென்னுந் திருநகரமாகிய; மிசை நிலவு பானிறவரிச் சிறகு அன்னம்பயில்பொழில் - மேலே பறந்துலவும் வெண்ணிறமும் வரிகளுமமைந்த சிறகையுடைய அன்னங்கள் சஞ்சரிக்குஞ் சோலை சூழ்ந்த; ஆலவாயின் மன்னிய சிவன் — திருவாலவாயில் நிலைபெற்ற சிவன்; யான் மொழிதருமாற்றம் - யாம் கூறியருளும் வார்த்தையாவது;- பருவக் கொண்மூப் படியென - கார்காலமேகம் போல; பாவலர்க்குரிமையி னுரிமையினுதவி கவிவல்லுநர்க்குத் தமதுரிமையினின்று அவருக்குரியைப் படவுதவி; ஒளிதிகழ் குருமாமதிபுரைகுலவிய குடைக்கீழ் -வெண்ணிறம் பொருந்திய பூரண சந்திரன்போல விளங்கும் வெண்கொற்றக் குடை நிழல்செய்ய; செருமாவுகைக்குஞ் சேரலன் காண்க - பகைவர் முன்னிலையில் அஞ்சாது செல்லும் குதிரையைச் செலுத்தும் சேரமான் காண்க.

பண்பால் யாழ்பயில் பாணபத்திரன் - (இசைத்தொழிற்) பண்பால் யாழ் வாசித்தலில் வல்ல பாணபத்திரன்; தன்போலென்பால் அன்பன்-தன் (உன்)னைப்போல என்னிடத்தில் அன்பு மிக்கோன்; தன்பாற் காண்பது கருதிப் போந்தனன் - தன் (உன்)னைக் காணக் கருதி வந்தனன்; மாண் பொருள் கொடுத்துவரவிடுப்பதுவே- மாட்சிமையுடைய பொருளைக் கொடுத்து என்னிடத்து வரவிடுக்க. என்பதாம்.

பொருள் விளங்கினதா? (ஆம்) அடுத்தது

### பலகையிட்ட படலம்

பலகையிட்ட படலம் என்பது சிவபெருமான் பாணபத்திரனுக்குப் பலகையொன்றுகொடுத்து அதன் மேல் ஏறிநின்று பாடும்படி செய்தமையால் ஏற்பட்ட பெயர்.

சோமசுந்தரக்கடவுளானவர் ஒருநாள் முத்துச் சிவிகையிலே மேற்கொண்டு திருப்பள்ளியறைக் கெழுந்தருளினார். அத்தருணம் பெருமழை பொழிந்தது. பாணபத்திரன் வாசித்துக்கொண்டு சென்ற யாழும் மழையிலே நனைந்தது. அவனும நனைந்து நடுக்குற்றான். அவனுடைய கால்கள் சேற்றிலே புதைந்துவிட்டன. இவற்றினால் அவன் சிறிதும் சோர்வுபடாது என்பையுமுருக்கும் அமுதகானத்தைப் பாடினான். சிவபெருமான் கருணைகூர்ந்து ஒருபலகையளித்து அதன் மேல் ஏறிநின்று பாடும்படி அருள் புரிந்தார்.

வரகுணன் இவ்வற்புதச் செய்தியை மறுநாள் அறிந்தான். பாணபத்திரனை அப் பலகைமீதிருத்தி "இவரே எமது சிவபெருமான்" எனக்கூறி உபசரித்தான். பாணபத்திரன் நான்கு காலமும் சோமசுந்தரக கடவுளை வழிபட்டுவந்தான் வரகுணன் சிவசாரூப்பியமடைந்தான். இது பலகையிட்ட படலத்தின் சுருக்கம்.

இனி இப்பாடத்திலுள்ள அரும்பதங்களையும் அவற்றின் பொருள்களையும் கூறுகின்றேன். பாருங்கள்.

திருப்பள்ளியறை-துயிலுமிடம்; மிறைத்தல்-விறைத்தல்; ஆணை - கட்டளையிடுதல்; சமாசாரம் - செய்தி; சிவசாரூப்பியம் - கடவுட்டன்மையடைதல்.

இப்பாடத்திலே மூன்று செய்யுள்கள் உள்ளன. அவை பாணபத்திரன் சிவபெருமான்மீது மனங் கசிந்து பாடியனவாகும். செய்யுள்களின் பொருளை அவதானித்துக் கடும் பதங்களின் பொருளைக் குறித்துக் கொள்ளுங்கள்.

இச்செய்யுள் கனவு நிலையிலே தலைவி தோழிக்குக் கூறியதாக அமைந்துள்ளது. முதலாவது செய்யுளின் பொருள்:—

அழகிய தந்த வரிசைகளையுடைய தோழியே! மதுரைப்பதியி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், உண்ணும் ஐயத்தின் பொருட்டு எமது இல்லில் வந்து புணர்ச்சிக் குறிப்பைத் தமது திருமுகத்திலே தோன்றுவித்து எனது மனத்தைக்கவர்ந்துகொண்டார்போலும். அக்காதற் குறிப்பு என் முகத்திலுந் தோன்றக் காமவாதை தீரக் கலக்கத் தொடங்கினேன். (தமது திருமேனியிற் பாதி) பெண்வடிவாயிருந்தார். (அது கண்டு) வெட்கமுற்று விழித்து உயிர் பிழைத்தேன். என்பதாம்.

இரண்டாவது செய்யுள்:-

ஒள்ளிய நெற்றியையுடைய தோழியே! நான் மாடக்கூடலாகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், தசையொழிந்த கபாலத்தை யேந்தி, உண்ணும் பலியின் பொருட்டு நமது இல்லின் கண்ணே உள்ளாளக்கீதம் (உள்ளாளக்கீதமென்பது கூத்து வேறுபாடு) பாடி என் மனதைக்கொள்ளைகொண்டார் போலும். நெற்றிக்கண்ணையுடைய அச்சோமசுந்தரக் கடவுள் பாடிய அவிநயத்தைக்கண்டு அவரது திருமார்பிற் கலக்கத்தொடங்கினேன். (தமது திருமேனியிற்) பாதி பெண்வடிவமாயிருந்தார். (அது கண்டு) வெட்கி விழித்து உயிர் பிழைத்தேன். என்பதாம்.

மூன்றாவது செய்யுள்;

அழகிய அரிபரந்த கண்களையுடைய பெண்ணே! திருவாலவாயென்னும் மதுராபுரியையுடைய சோமசுந்தரக்கடவுள் பலியேற்கும் பொருட்டுக் காமக் குறிப் புணர்த்தும் புன்னகை செய்து, எனது சந்தனக் கோலத்தையுடைய தனத்தின்மேல் கைவைக்க மயங்கிச் சோரும் யான், உமாதேவியார் இடப்பாகத்திலிருக்கக்கண்டு நடுக்குற்று விழித்து உயிர் பிழைத்தேன். என்பதாம்.

அடுத்தது இசைவாது வென்ற படலம் அதனை அடுத்த பாடத்திற் படிப்போம். உங்களுக்குப் பரீட்சையிலே 'சுருக்கமும்' ஒரு வினாவாகப் பாஷைப்பாடத்திலே கேட்கப்படும். ஆதலின் இசைவாது வென்ற படலத்தை மூன்றிலொரு பங்காகச்சுருக்கிப் பொருள் குன்றாமல்எழுதிவாருங்கள்.

வணக்கம்.

### தொழிற்கல்விக் கல்லூரிகள்

தொழிற் கல்வியூட்டும் கல்லூரி ஒன்று காலியில் அமைக்கப்பட்டுள்ளது அது போன்ற இரு கல்லூரிகள் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் அமைப்பதற்குக் கல்வி அமைச்சு திட்டமிட் டிருக்கின்றதாம்.

### செல்வச் சந்நிதியில் புராண படனமும் சற்பிரசங்கமும்

வடமராட்சியைச்சார்ந்த தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் 9ம் திருவிழாத் தொடக்கமாக (26-8-57) தீர்த்தோற்சவம் வரையும்அடியார் திருமடத்தில் மாலை 5 மணி தொடக்கம் 8 மணிவரையும்புராண படனமும் சற்பிரசங்கங்களும் அகில இலங்கைச் சிவனடியார் சங்க அருளாதரவில் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர் எனச் சங்கச்செயலாளர் திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் தெரிவிக்கின்றார்.

### ஒப்பந்தம்பற்றி அ. இ. வா. முன்னணி

முதல்மந்திரி தமிழரசுக் கட்சி ஒப்பந்தம்பற்றி அகில இலங்கை வாலிப முன்னணிக் காரியதரிசிகள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் கேள்விகளுக்குத் தக்கவாறு குறித்த ஒப்பந்தம் திருத்திகரமில்லையே யெனினும் எங்கள் மூன்று கேள்விகளுள் ஒன்றாகிய குடியேற்றம் குறித்து நேரடி நடவடிக்கை வேண்டப்படாத அளவுக்கு ஒப்பந்தத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமையால் எங்கள் திருத்தியீனத்தை இதுவரையில் வெளிப்படுத்தாமலிருந்தோம்.

மொழிவிஷயத்தில் தமிழ் மக்களின் விருப்பத்தை, குறித்த ஒப்பந்தம் எவ்விதமாயும் திருத்திபண்ணவில்லை. இலங்கை இந்தியர் பிரசா உரிமைபற்றியும் வேண்டியது செய்யப்படவில்லை.

நாங்கள் நினைத்திருந்ததற்கு மாறான கருத்துக்களைக் குடியேற்றம்பற்றியே முதல் மந்திரியும் காணி மந்திரியும் வெளியிடுவதைக் கண்டு வருந்துகின்றோம். ஆகையினாலே தமிழ் மக்கள் விஷயத்தில் நீதியாக நடக்கும்படி அரசாங்கத்தை வேண்டுகின்றோம். தனிச்சிங்களச் சட்டத்தையும் சனநாயகத்துக்கு விரோதமான பிற நடவடிக்கைகளையும் எதிர்க்குமாறு தமிழ்மக்களை வேண்டுகின்றோம் என்பது அவர்கள் அறிக்கையின் சுருக்கம்.

## சைவ இன்னிசைப் பிரசங்கம்

நிகழும் 20-8-57 செவ்வாய்க்கிழமை யன்றிரவு சைவபரிபாலனசபை யாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் திருவாவடுதுறைச் சைவப் பிரசாரகரும் சித்தாந்த வித்தகருமாகிய ஸ்ரீமதி ஈசுவர வடிவம்மையார் 'முருகன் பெருமை' என்னும்பொருள் பற்றி ஓர் இன்னிசைப் பிரசங்கம நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் தமது முன்னுரையில் முருகனுக்கும்சிவனுக்கும் பேதமில்லையெனவும் சிவனைப்போல முருகனும் அடியார்களுக்கு இம்மை மறுமை யின்பங்களை உதவுவாரெனவும் முருகனுடைய பெருமை அளவிடுதற்கருமை யெனவும் அவருடைய பெருமை வடமொழி நூல்களிலும் [illegible] தென்வும் கூறினர்.

பிரசாரகர் தொடக்கத்தில் சபையில் உள்ளவர்களுடைய மனதை உருக்கக்கூடிய முறையில் முருகன் பேரில் தோத்திரப் பாக்களையோதினார்கள். தமிழ் நூல்களில் முருகன் பெருமை கூறப்பட்டிருக்கிறவண்ணம் சைவமரபின்படி விளக்கினார்கள். திருமுருகாற்றுப்படையில் ஆறு திருமுகங்களைப் பற்றிக் கூறிய பாகத்தைக் கூறி அவற்றில் முதல் இரு திருமுகங்களையும் செவ்வனே விளக்கினார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களுக்குள் தலைமைபெற்றிருக்கின்ற கண்ணப்ப நாயனார் முருகனது திருவருளால் அவதரித்தவர் என்பதை அம்மையார் பெரியபுராணச் செய்யுட்களைப் பிரமாணமாகக் காட்டி விளக்கினார்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கைலாச வாகன உற்சவத்துக்குச் சபையில் உள்ளவர்கள் போகவேண்டிய வசதிக்காகக் கூட்டம் சுருக்கமாக இரவு 8½ மணியளவில் பூர்த்தியடைந்தது.

—0—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாலை வரதராசப்பெருமாளும் திருவடிநிலைத் தீர்த்தமும்

சரித்திரப் பெருமை வாய்ந்த யாழ்ப்பாணத்தின் மேற்பக்கமாய் கடற்கரை அருகில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் மகா விஷ்ணுவின் கொடியேற்ற விழாத் தொடங்கி பதினேழாம் நாளில், அட்டமி திதியில் உரோகிணி நட்சத்திரத்தில் வாதராசப் பெருமான், விசித்திரமான சித்திர வேலைகள் செய்யப்பட்ட திருத்தேரில் ஆரோகணித்து அடியார்கட்குத் தரிசனந்தந்து தயிர்முட்டி விரதகாரர் அடிக்க, தாம் கண்ணுற்றுக் காட்சியளித்தார். அடுத்த நாளாகிய மிருகசீரிட நட்சத்திரத்தன்று, அதிகாலையில் பொன்னாலையிலிருந்து, அடியார்கூட்டங்கள் அரோகராச் சொல்ல, ஸ்ரீமந் நாராயணன், கொழும்பிலுள்ள சுழிபுரத்து வியாபாரிமார்களால் இத்திருவிழா வைபவத்திற்கென விசேடமாய்ச் செய்வித்த இரதத்தில் அமர்ந்து, எழுந்தருளினார். திருவடிநிலையை அடைந்ததும், பரம்பரையாய்ச் சாத்திர சம்பந்தமான வைபவங்களில் தேர்ச்சிபெற்ற, குரு பாம்பரையிலுள்ள குருவால், அபிடேகம்செய்யப்பட்டு, சுவாமி மடத்திற்கேகி, அலங்கார பூசைகள், விசேட பூசைகள், அர்ச்சனைகள் நடந்தன. பின்பு உச்சிக்காலமாகிய 12 மணிக்கு மகேசுரபூசை நடைபெற்றது. ஆயிரக் கணக்கான அடியார்கட்கு திருவமுதளிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்துவந்த, விசேட நாதசுர தவில் காரரால் சங்கீத முழக்கம் இரவு 6 மணிவரை செய்யப்பெற்றது. மின்சார விளக்குகள் பூட்டப்பெற்ற அதே இரதத்தில் பச்சைமேனி, பார்க்கிறவர்கட்கு மின்னல் போல் மின்ன, எம்பெருமான் திருவடிநிலையை ஆசீர்வதித்து பொன்னாலைக்குப் புறப்பட்டார்.

---

# தமிழ் மக்கள் வாழ்க்கையிற் காகத்தின் இடம்

## அறிவூட்டும் பண்பும் அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளும்

ஸ்ரீ வ. குகசர்மா

காகம் ஒரு இழிவான பறவையாய்க் கருதப்படுகிறது. காக்கையிற் பல இனங்கள் உண்டு. காக்கை என்னும்பெயர் "கா"எனக் கத்துவதால் வந்த காரணப்பெயர் என்பர். காகத்திற்கு ஒரு சிறந்த குணம் உண்டு. அது தனக்குக் கிடைத்த உணவைத் தம் இனத்துடன் கலந்துண்ணும். "காக்கை கரவா கரந்துண்ணு மாக்கமும்— அன்னநீரர்க்கேயுள" என வள்ளுவரும் இதனை விதந்தோதினர். "காகமுறவு கலந்துண்ணக்கண்டீர்" எனத் தாயுமானாரும் கூறினர். சனி பகவானது வாகனம் காகம் சனிவார விரதமிருப்போர் காகத்திற்கு உணவிட்ட பின்பே தாம் உண்பர். இறந்தோர்க்குக் கடன் செய்யும் நேரத்திலும் காக்கைக்கு உணவூட்டும் வழக்கம் ஆதிகாலம் தொடங்கி இருந்து வருகிறது.

திருடுவதிலும் காகம் மிக வல்லமை யுடையது. "எத்தித் திருடுமந்தக் காக்கை அதற்கு இரக்கப்படவேணுமடி பாப்பா" எனப் பாரதியார் பாடியுள்ளார். காகத்தின் உருவம் களி தருவது. அதன் குரல் இனிமை யுள்ளது என்பது பாரதியார் கருத்து. காக்கையின் இறகினிலே நந்தகோபாலனின் கரிய நிறத்தைக் காண்பதற்காக அவர் கூறுகிறார் காலையிலேகூவும்குயிலிசையுடன், கோழியின் கூவலுடன், காக்கையின் கா,கா, என்னும் சத்தமும் கலந்து ஓர் இன்பத்தைக் கொடுககிறது. அந்திப் பொழுதில் காக்கையை ஒரு இனிமை நிறைந்த பட்சியாக நம்முன் கொண்டுவருகிறார் பாரதியார்.

"காவென்று கத்திடும்
காக்கை — என்றன்
கண்ணுக்கினிய
கருநிறக் காக்கை"

என்று தொடங்கி அதன் செயல்களைப் பாடுகின்றார்.

காக்கை கூகை என்னும் இரு பட்சிகளுக்கும் பகை. காக்கை கூகையைப் பகலிற் கண்டால் கொத்தித் துரத்தி வெற்றி முழக்கம் செய்யும் ஆனால் இரவிலோ காகத்தைக் கூகை கண்டால் வெற்றி மற்றப் பக்கம் மாறிவிடும், அரசர் காலமறிந்து கருமமாற்ற வேண்டுமென்பதை திருவள்ளுவர் காகத்தின் உதாரணத்தைக் கொண்டே விளக்குகிறார்.

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும் — வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்பது வள்ளுவர் வாக்கு

இவ்வாறு ஒன்றற்கொன்று சேர முடியாத வெவ்வேறு காலங்களிற் சஞ்சரிக்கும் காகமும் கூகையும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் கூவும் விநோதத்தையும் பார்க்கிறோம்.

"சிறுவெள் ளென்பின் நெடுவெண் களரின், வாய் வன் காக்கை கூகையொடு கூடிப் பகலுங் கூவு மகளுள்"

எனப் புறநானூறு எடுத்துப் பேசுகிறது.

காகத்திற்கு இரண்டு கண்கள் இருந்தாலும் கண்மணி ஒன்றேயிருப்பதாக நாம் இலக்கியங்களிற்காண்கின்றோம்.

"காகத்திரு கண்ணிற் கொன்றேமணி கலந்தாங்கிருவர், ஆகத்துள்ளோருயிர் கண்டனம்" எனத் திருக்கோவையாருட் கூறப்படுகிறது.

காகத்தின் அழுகை நடை முதலியன இனிமேல் வரப்போகும் காரியங்களைக் காட்டுவதாக இருக்கிறது எனத் தமிழர் நம்பி வந்தனர். காக்கை மனைக்கண் வரின் அங்குள்ள மகளிர் காக்கையைப் பார்த்து "விருந்து வருமாயின் கரைந்து காட்டுக, வாராதாயின் நடந்து காட்டுக" எனக் கூறுதல் வழக்கம். காக்கையின் இச் சிறப்பைப் பொருளாக வைத்துப் பாட்டமைத்தமையால் நச்செள்ளையார் என்னும் புலவர் 'காக்கைபாடினியார்" என்னும் காரணப்பெயரால் அழைக்கப்பெறுகின்றார். காகம் கரைந்தால் விருந்துவரும். இடப்பக்கமிருந்து வலப்பக்கமாகச் செல்லில் மிக்வும் நல்லது. பிரயாணம் புறப்படும்போது முன்னே செல்லுதல் வாய் மெல்லுதல் மிகவும் நல்லதெனச் சோதிடநூல்கள் கூறுகின்றன.

வலது பக்கமாயிருந்து இடது பக்கமாய்ப் போதல் துர்ச்சகுனமாகும். காகம் தலை முதலிய உறுப்புகளில் தீண்டுதல் கூடாது. அவ்வாறு தீண்டுமாயின் அது வரப்போகும் தீமையை எடுத்துக் காட்டுவதாகும்.

மேற்போந்தவற்றால் காக்கையானது தமிழ் நாட்டில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்ததென்பதை ஓரளவிற்குக் காணக்கூடியதாயிற்று.

---

### நெருக்கடி நீக்கத்துக்கு ஆயுர்வேதம்

—0—

கண்டி தர்மராசக் கல்லூரியில் நடந்த ஆயுர்வேத வைத்தியர் கூட்டமொன்றிற் சுகாதார மந்திரி ஸ்ரீமதி விமலா விசயவர்த்தன பேசும்போது அரசாங்க வைத்தியர்கள்குறைவாயிருப்பதனால் அரசாங்க வைத்திய சாலையிலுண்டாயுள்ள நெருக்கடியை ஆயுர்வேத வைத்தியசாலைகளைக் கிராமங்களில் திறப்பதனால் நீக்கலாம். சிறு வைத்திய சாலைகளைக் கிராமங்களில் அமைப்பதோடு ஒன்பது பெரிய வைத்தியசாலைகளை ஒன்பது மாகாணங்களிலும் அமைக்க முயலுகின்றேன் என்று கூறினர்.

---

பசி (அக்டோபர்) முதலாந் திகதிதொடக்கம்சிங்களமக்கள் ஆயுதம் தாங்கிச் சண்டை செய்வார்கள் என்று எச்சரிக்கை ஒன்று விடுத்துள்ளாராம்.

---

நேயர்கள் நெஞ்சம்

# பிள்ளையார் பிடிக்க குரங்கானதே

—0—0—

இலங்கையில் மதுபானம் இருக்கவேண்டுமா அல்லது இல்லாதொழிக்க வேண்டுமா என்று ஆராய்ச்சி செய்யும்படியாக அரசாங்கம் ஓர் விசாரணைக் குழுவினரை சேர். வேலுப்பிள்ளை குமாரசாமியின் தலைமையில் ஏற்படுத்தியது. விசாரணைக் குழுவினர் கொஞ்சக் காலமாக விசாரணை செய்து தங்கள் அறிக்கையை வெளியிட்டனர். இலங்கையின் தற்கால நிலைக்கு மதுபானத்தை ஒழிக்கக் கூடாது என்று அவ்வறிக்கையில் அவர்கள் சொல்லுகின்றனர். அதை இல்லாதொழித்தால் ரூபா முப்பத்துஏழரைக் கோடி தொடக்கம் எட்டுக் கோடி வரை வருடந்தேறும் அரசாங்கத்திற்கு நட்டமாகும். சட்டம் மூலம் ஒழிப்பதிலும் பார்க்கசனங்கட்டு சொல்லி ஒழிக்கலாம். அதுவுமல்லாமல் இந்தியா மதுபானத்தை அறவே ஒழித்ததனால் இப்போது அநேக கஷ்டங்கட்குட்பட்டிருக்கின்றது. என்பனவாய் வரும் விபரீதக் கருத்துகளைக் கேட்டு குழுவினர் சொல்லுகின்றார்கள். அறிவுள்ள மனிதனை அறிவுகெடச் செய்து 'கொலை', படுகாயம், களவு, கற்பழித்தல் முதலான கொடிய செயல்களைச்செய்யும் அரக்கனான மதுபானத்தை நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்களின் நன்மைக்குமாக இல்லாதொழிப்பதை விடுத்து நஞ்சை அருந்திக் கெடும் வழி காட்டுகிறார்கள்.

"துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர்
எஞ்ஞான்றும் நஞ்சுண்
பார் கள் உண்பவர்"

என்கின்றார் திருவள்ளுவர். நஞ்சைக் கொடுத்து எட்டுக் கோடி பெறவா? அன்னியர் இராச்சியம் நானூறு வருடகாலம் இலங்கையில் நடந்தகாலத்தில்உண்டான இந்த ஆலகால விஷத்தை சுயராச்சியம் வந்த பின்பாயினும் இல்லாதொழிக்கக்கூடாதா? சனங்கட்குப் புத்தி சொல்லி அவர்கள் மதுவை விட்டால் இந்த எட்டுக்கோடி ரூபாவும் அரசாங்கத்திற்கு வராதே. இந்தியாவின் அரசியல் நிபுணர்கள் இந்த நஞ்சு வேண்டாமென்று சட்டம் இயற்றி இல்லாதொழித்தார்கள். முதல் முதல் ஸ்ரீ இராசகோபாலாச்சாரியர்தானே இந்த முடிவைச் செய்தது. அவரிற் பார்க்க அரசியல் அறிவு படைத்தவர் யார்? இந்திய அரசாங்கத்திற்கு இப்பூரண மதுவிலக்கால் ஏற்பட்ட பணநட்டம் மிகப் பெரிது. இந்தியாவில் எத்தனை வித மான ஆக்க வேலைகளைக் கமத்தொழில் மூலம் கைத்தொழில்மூலம் விஞ்ஞானம் மூலம் செய்கிறார்கள். இலங்கையில் என்ன செய்கின்றோம். இலங்கைக்கு விலையுயர்ந்த உவிஸ்கி,பிரண்டி, சம்பேயின் பெட்டிபெட்டியாய் வந்து மலை போலக் குவிந்து அதிகபணம் தங்க நாணயமாய் இங்கிலாந்திற்கும் பிறநாடுகளுக்கும் நம் நாட்டை விட்டுச் செல்கின்றதே. பூரண மதுவிலக்கு ஏற்பட்டால் அன்னிய நாட்டுக் குடிவகை இங்கே வர மாட்டாவே. அதுவுமல்லாமல் இலங்கையில் வர வரக் கொலைகளும் மற்றும் அடாத செயல்களும் கூடுகின்றனவே. எதுவும் இந்த மதுவாலல்லவா? கள் இறக்கி அதனால் சீவிக்கும் மக்கள்தானும் கள் இறக்கும் தொழிலை விடுவார்கள். அவர்கட்கு அரசாங்கமோ அல்லது வேறு தொழில் செய்யும் சங்கங்கள் ஸ்தாபனங்களோ வேறு தொழிலைக் காட்டலாம். பெருந்தொகைச் சீனி செய்தால் இலட்சக்கணக்கான ரூபா சம்பாதிக்கலாமே. அநேக மக்கள் சீனி ஆலைகளில் வேலை செய்து சீவிக்கலாமே. பதநீரில் உண்டாக்கப்படும் சீனி சுகாதார முறையின்படி பாவிப்புக்குத் திறமானதாமே, இப்படி எல்லாம் கள்ளை இல்லாது மாற்றி, பனங்கட்டி சீனி உண்டாக்கினால் பணலாபம் மாத்திரமல்ல, சனங்களின் சரீர சுகமும் ஏற்படுமல்லவா? மக்கள் அரசாங்கம் என்று மார்பு தட்டும் அரசாங்கம் ஒருபோதும் இந்த மது என்னும் இராக்கதனை, இந்நாட்டை விட்டு அகற்றாது போலிருக்கின்றது. இந்நிலைமையை உணர்ந்து மக்கள் தாமாகவே இதை அகற்ற வேண்டும்.

நா. சேனாதிராசா

யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்
சுழிபுரம், 25-8-57.

---

### சண்டை செய்வார்களாம் சிங்களவர்

வெலிமடைத் தொகுதித் தேர்தற் கூட்டமொன்றில் ஸ்ரீ அல்பேட் கொடமுன பேசும்போது சத்தியாக்கிரகம் வேலை நிறுத்தம் என்பவற்றில் சிங்கள மக்கள் நம்பியிருக்கமாட்டார்கள். முதல் மந்திரி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகம் செய்து தூய்மையடைக

எங்கள் செயல்கள் எல்லாம் குறிக்கப்பட்ட ஓர் நோக்கத்தை யுடையவையாயிருக்கின்றன. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு தனிக்கருத்திருக்கின்றது. ஒவ்வொரு செயலும் குறித்த ஓர் இடத்திலிருந்துருவெடுத்துக் குறிக்கப்பட்ட ஒரு முறையில் நிகழ்கின்றது. இவற்றின் கருத்தென்ன? இவைபற்றி ஆராய்ந்து விளங்கவேண்டும், செயல் செய்வோன், செயப்படுபொருள் ஆகிய எல்லாம் ஓரே பொருளின் பல பகுதிகளாய் ஈற்றிற் காண்கின்றோம். எல்லாவற்றையும் அந்த முழுமுதற்பொருளுக்கு நாங்கள் அர்ப்பணஞ் செய்கின்றோம். இவ்வர்ப்பணம் சடப்பொருள்களை நெருப்புக்குள் இட்டுச் செய்யும் அர்ப்பணம் போன்றதல்ல. ஒவ்வொரு செயலும் அர்ப்பணிக்கப்படுகின்றது. நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் தியாகமாகவே செய்தல் வேண்டும். தியாகம் தன் இழப்பாகும். அது ஞானயக்ஞம் என்று சொல்லப்படும். அது உண்மையுணர்வால் நான் என்னும் அகங்காரத்தை அழித்தலாகும்.

—ஸ்ரீ. சுவாமி சிவானந்தா.

## மயிலிட்டி தெற்கு
## ஞானோதய வித்தியாலயம்

### அவசியம் செய்யவேண்டிய திருத்தங்கள்

—:0:—

இற்றைக்கு முப்பதாண்டுகட்கு முன்னர் நமது தென்மயிலைக் கிராமத்தில் சைவப் பாடசாலை கிடையாது. ஒருவர் சைவப் பாடசாலையில் கல்விபயில்வதென்றால் வீமன்காமம் உடையார் பள்ளியென வழங்கும். சிவசுப்பிரமணியவரோதய வித்தியாசாலைக்கு அல்லது குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலைக்குச் செல்லவேண்டும். இப்படியாகப் படித்த மாணவாகள் பலர் நமது கிராமத்தில் உளர். ஆனால் பெரும்பான்மையோர் கிறிஸ்தவ பாதிரி பாடசாலைகளிலேயே படிக்க நேரிட்டது. அடியேனும் கிறிஸ்தவ பாடசாலையில் ஆரம்பகாலத்தில் படித்ததுண்டு கிறீஸ்த்தவ போதனைகள் கேட்டதுமுண்டு

இஃது இவ்வாறிருக்க, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குருநாத சுவாமிகள் வித்தியா பரம்பரையைச் சார்ந்த சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் தாவடி சோமாஸ்கந்த பண்டிதர் அவர்களின் மாணவராகிய ஸ்ரீ க. மயில்வாகனப்புலவரின் முன்னை நாள் வேண்டுகோளின்படி அவர் சகோதரர் வர்த்தகர் திரு. க. கந்தையா அவர்களும் எம் கிராமத்துப் பாலர் ஞானோதய சங்கத்தாரும் சேர்ந்து 1927-ம் ஆண்டு சைவமும தமிழும் உய்யச் சைவப் பாடசாலை யொன்றை மயிலிட்டி தெற்கு கட்டுவன் சந்திக் கண்மையில் தாபித்தனர் அதற்கு ஞானோதய வித்தியாசாலையெனப் பெயருமிட்டனர். இப்பாடசாலைத் தொடக்கத்தில் பல மாணவர்கள் சேர்ந்து படித்தனர். ஆரம்பகாலத்தில் கட்டுவனூர் வாசரும் அளவையம்பதி வடக்கு ஞானோதய வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. அ. பொன்னையா உபாத்தியாயர் அவர்களை இப் புதிய பாடசாலைக்குத் தலைமையாசிரியராக நியமனம்செய்தனர். பாடசாலையைச் சில நிபந்தனைகளுடன் பாலர் ஞானோதய சங்கம், யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாருக்குக் கையளித்தது. அதன் பின் 16 மாத கால

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

எல்லைக்குள் பாடசாலை அரசினரின் உதவி நன்கொடையைப்பெற்றது. நான்கு ஆசிரியர்களுடன் 120மாணவர் கல்வி பயின்றனர்.

(வரும்)

—0—

### ஆன்மீகநெறியே ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் உங்களால் இயன்ற அளவுக்குப் பாடுபடவேண்டும். ஏனெனில் மனிதர்களைக் கொண்டதுதான் உலகசமுதாயம் ஒவ்வொரு உள்ளமும் அமைதியை நாடிநின்றுற்றான் உலக அமைதியும் நிலைபெறும். என்று சென்னைப்பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலே உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி கலாநிதி பி. வி. இராசமன்னார் அவர்கள் பேசும்போது கூறினர்.

### இலங்கையில் சிவசமயம்

## விஜயனின் வருகைக்கு முன்புள்ளது

இலங்கையின் வடபகுதிக் கரையிலிருந்து சிறிது தூரத்திலுள்ள தென் இந்திய மக்கள் மிகப்பழைய சரித்திர காலத்திலிருந்தே கூட்டங்கூட்டமாக வந்து இலங்கையிற் குடியேறியுள்ளார்களென்பது மறுக்கமுடியாத உண்மை என்று கொழும்புத் தினசரி ஒன்றில் எழுதிய ஸ்ரீ ஜே.ரி. இரத்தினம் தமது கூற்றுக்கு ஆதாரமாகப் பின் வரும் கருத்துக்களை எடுத்துக் காட்டுகின்றார்.

விஜயா இலங்கைக்கு வருதற்கு மிக நீண்டகாலத்துக்கு முன்பே நன்கு மதிக்கப் பெற்றவையாயுள்ள சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் "ஈஸ்வரம்" எனப்படும் ஐந்து திருக்கோயில்கள் இலங்கையில் நிலவியிருக்கின்றன. இவை இந்தியாவின் வணக்கத்தை உரிமைப்படுத்தி உரிமைப்படியே வணக்கத்தைப் பெற்று வந்துள்ளன. மகாதித்தாவக்கு அணிமையிலுள்ள திருக்கேதீஸ்வரம் சலாவத்தையிலும் முத்துக் குளிப்புத்துறையிலும் மேம்பட்டு நிற்கும் முன்னீசரம், மாந்தோட்டைக் கணிமையிலுள்ள தொண்டேஸ்வரம், கொட்டியாரக்குடாக்கடலுக்கெதிரிலுள்ள திருக்கோணேஸ்வரம், காங்கேயன் துறைக்கண்மையிலுள்ள நகுலேஸ்வரம் என்பவை அவ்வைந்து தலங்களாகும். (பெயர் வேறுபாடுகள் அக்காலத்தவை) குறித்த தலங்கள் குறித்த துறைகளுக்கணிமையில் அமைந்திருத்தல் காரணமில்லாது நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகமாட்டா. அத்துறைகளுக்கு வந்து வியாபாரஞ் செய்த தனவந்தர்களின் ஆன்மார்த்த தேவையைப் பூர்த்திபண்ணுதற்கு அவை அமைக்கப்பெற்றிருக்கலாம்.

(கலாநிதி போல் பீறிஸ் அவர்கள் J. C. B. R. A. S. Vol 26 18-ம், 19-ம் பக்கங்களிற் கூறியது).

## அகில இலங்கைச் சைவமகாநாடு

ஆவணிமீ 17உ (1-9-57) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடங்கி ஷை மகாநாடு கீரிமலை ஸ்ரீவைத்திய லிங்கத்தார் மடாலயத்தில், திரு வி. வீரசிங்கம் B. A. J. P. அவர்கள் தலைமையில் நடைபெறும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் (சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி) திரு. மு. ஞானப்பிரகாசம் B.A. Bsc அவர்கள் (பரமேஸ்வரக் கல்லூரி, யாழ்ப்பாணம்) திருமதி M. வைத்தியலிங்கம் B A அவர்கள் (சைவமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) முறையே "வைதிக-சைவம்" "சைவ சித்தாந்-தம்" "சைவமகளிர்மாண்பு" என்னும் பொருள்கள்பற்றி ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்.

—0—

### தலைமன்னர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா

நிகழும் ஆவணி மாதம் 19-ம் திகதி (4-9-57 புதன்கிழமை வரும் பூராட நட்சத்திரத்தில் தலைமன்னரில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தேவிமுத்துமாரி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் பூசையும் நடைபெறும். அன்றுமாலை தேவாரபாராயணமும், சைவப் பிரசங்கமும், மேளக் கச்சேரியும், கரகமும் நடைபெறும். இரவு அம்பாள் திருவீதி எழுந்தருளும் உற்சவமும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது அடியார்கள் வந்து அம்பாளை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம் என்றும், இவ்வாலயத்தின் பரிபாலனமும், அதன் சொத்துக்களும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கிறதென்றும் அடியார்களுக்குப் பிரயாணவசதி மன்னரில் உந்துவண்டி மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறதுஎன்றும் திருக்கேதீச்சரத் திருப்பணிச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

கொக்குவில் மேற்கு
கந்தையா செல்வத்துரை

வழக்காளி

வழக்கு இல: M B 1483

எதிராக

இணுவில் கிழக்கு
1. செல்லையா வயித்திலிங்கம்
2. தங்கரத்தினம் வயித்திலிங்கத்தின் மனைவி

எதிராளிகள்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 1483ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957-ம் வருஷம் ஐப்பசி மாதம் 19-ந் திகதி (19-10-57) சனிக்கிழமை காலை 10-30 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 494-ம், 11-2-57 தொடக்கம் 4-4-57 வரைக்கும் ரூபா 250/-க்கு 12 வீத வட்டியும், அதன் பின் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 135-50 சதமும்.

காணியின்விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று இனுவிலிறை "மல்லதோட்டம்" (Mallathoddam) நிலப் பரப்பு $1\frac{1}{2}$, வீடும் பயிர்களும் கிணற்றுப் பங்கும், கிழக்கெல்லைக் காணிக்கூடாகவுள்ள தூர்வை வழி வாய்க்கால்ப் பங்கும் எல்லை கிழக்கு கனகசபை கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். வடக்கு வல்லிபுரம் பெண் வயிரவிப்பிள்ளையுடைய ஆதனம், மேற்கு செல்லையா பெண் செல்லத்தினுடைய ஆதனம், தெற்கு வேலாயுதர் காசிநாதருக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம், மேற்கெல்லைக் காணிச் சொந்தக்காரர்கட்கு தென்கிழக்குப் பக்கத்திலுள்ள கிணற்றுக்குப் போகவும் வரவும் வழி வாய்க்கால் பாவிப்புரிமையும் தவிர இதடங்கலும்,

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர்.

மல்லாகம்,
24-8-75.

M. 99 30-8-57.

## அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு

தமிழ் மறைக் கழகம் சென்ற இரண்டு ஆண்டுகளிலும் நடத்தியது போல் 1958-ம் ஆண்டிலும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வை நடத்த ஒழுங்கு செய்துள்ளது. இத்தேர்வு மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு, தொடக்கப் பிரிவு என நாலு பிரிவுகளாக நடைபெறும். தொடக்கப்பிரிவிற்குத் திருக்குறளில் முதற் பதினைந்து அதிகாரங்களும், கீழ்ப்பிரிவிற்கு அறத்துப் பாலும், மத்திய பிரிவிற்கு அறத்துப்பாலுடன் பொருட்பாலும், மேற்பிரிவிற்குத் திருக்குறள் முழுவதும் பாடமாக வகுக்கப்பட்டுள்ளன.

அடுத்த பங்குனி (மார்ச்) மாதம் நடக்கும் தேர்வுக்கு ஐப்பசி (அக்டோபர்) முதலாந்திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் திறமை காட்டுவோருக்குத் தங்கப்பதக்கங்களும், வெள்ளிப்பதக்கங்களும் புத்தகங்களும் பரிசிலாக வழங்கப்படும். விவரங்களுக்கு தமிழ் மறைக் கழகம், இரத்மலானை என்னும் முகவரிக்கெழுதுக.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியகோட்டு
இல. M B 1298
1. துரையப்பா விசுவநாதனும் பெண்
2. ஜீவநாயகியும்
கொக்குவில் மேற்கு
தற்போது வட்டுக்கோட்டை.
வழக்காளிகள்.

எதிர்

1. யாக்கோபு சேலிசுவும் பெண்
2. லேனுப்பிள்ளை —பாஷையூர்
யாழ்ப்பாணம்,
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் M B 1298ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஞு ஐப்பசி மீ 12 உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்திய் விற்கப்படும்.

தீர்வைதொகை ரூபாய் 11450) ரூபாய் 10000 க்கு 29-10-56 துவக்கம் 6-12-56 வரைக்கும் பத்து வீத வட்டியும் அதின்பின் கூடிய மொத்ததொகைக்கு பணம் கொடுத்து தீர்க்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-14 இதில் ரூபாய் 214-24 செலவாகியது ரூபாய் 47-26 செலவாக வேண்டியது.

காணி விபரம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் புன்னன் புலம் வேலன்குடியிருப்பு அல்லது சாந்தி வளவும் வேலன்குடியிருப்பு என்னும் காணி நீ இ. 1 குளி 3, 9/32. புதிதாக கட்டிய கல்வீடும் குசினியும் மலகூடமும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும்,

எல்லை கிழக்கு ஞானமுத்து பெண் தங்கத்தின் உரித்தாளரின் ஆதனம்.

வடக்கு அந்தோனி சவிரிமுத்துவின் ஆதனம் மேற்கு றேட்டு.

தெற்கு அலரணம் தம்பிப்பிள்ளையின் உரித்தாளரின் ஆதனம் இவை அடங்கலும்.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
26-8-57.

M 97 30-8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திருநெல்வேலி

# ஞானப்பிரகாச முனிவர்

—:0:—

## சிவஞான சித்தியார் உரை

ஞானப்பிரகாச முனிவர் எழுதிய சிவஞான சித்தியார் உரையினை திருமயிலை சைவத்திருவாளர் C. V ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ளார்கள். இவ்வரியவுரை வெளிவருதற்கு சைவத் தமிழ் மககள் சிறப்பாக ஈழநாட்டுச் சைவமக்கள் இயன்ற பணவுதவி புரிவது சிறந்த சிவதொண்டாகும். பணவுதவி புரிவோர்க்கு அவர்கள் உதவிய பணத்துக்குத் தக்கவாறு புத்தகங்கள் அடக்கவிலைக்கு வழங்கப்படும் பணம் அனுப்பும் அபிமானிகள் அதனை சைவபரிபாலனசபைச் சமயப்பிரசார அமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு விநயத்துடன் வேண்டுகின்றேன்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 26-8-57,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசாரஅமைச்சர்.

M, 96 30-8, 4-10-57

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 1481

1 சாமுவேல் யெயசீனன் லூயிஸ்யும் பெண்ணும்
2 புஸ்பமலர் இருவரும் மானிப்பாய்

வளக்காளி

1 பொன்னுத்துரையின் மகள் ஆனைக்கோட்டை

எதிராளி

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் M, B. 1481-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1957-ம் ஆடு கார்த்திகை மீ 9ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்சொல்லிய எதிராளி இரண்டாவது வழக்காளிக்கு ரூபா இரண்டாயிரத்தி இருனூற்றித் தொண்ணூற்றிநாலு சதம் நாற்பதும் (2294·40) வட்டியும் ரூபாய் இரண்டாயிரமும்(2000/) 11-2 57 தொடக்கம் 24-5-57 வரைக்குப் 10 வீத வட்டியும் அதற்குப் பின் கூடிய முழுத்தொகைக்கு 24.5-57 தொடக்கம் காசு கொடுக்குமட்டும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 199-77 சதம்,

ஆதன விபரம்

வலிகாமம் மேற்கு வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஆனைக்கோட்டைக் கோவிற்பிற்று மானிப்பாயில் கண்றை தோட்டம் என்னும் காணி ஏழு பரப்பும், வீடும், கிணறும், செய்பயிர்வகைகளும், (வீடு புதிதாக அமைக்கப்பட்டது) எல்லை கிழக்கு றேட்டு வடக்கு ஒழுங்கையும் மதியாபரணம் சம்பந்தமூர்த்தி, மேற்கு சம்பந்தமூர்த்தி, தெற்கு மூத்தான் சண்முகம்,

இ. கனகரெட்ணம்
கொமிஷனர்

28-8-57.

M 98 30-8

உ
சிவமயம்

யாழ்ப்பாணம்

# சைவபரிபாலன சபை

## 69-வது வருடாந்தக் கூட்டம்

மேற்படி வருடாந்தக் கூட்டம் ஏவிளம்பி ஸு ஆவணி மீ 29-உ (14—9—57) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்திற் கூடும்.


நிகழ்ச்சிகள்

1 தேவாரம்
2 சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3 செயலாளரின் அறிக்கை.
4 பொருளாளரின் வரவு செலவுக் கணக்கு.
5 C நிருவாகசபையின் C பிரிவு அங்கத்தவர்கள் தேர்தல்
6 புதுவருட உத்தியோகத்தர் தேர்தல்
7 பிரேரணைகள்
8 நன்றியுரை

☞ குறிப்பு: பிரேரணைகள் 30-8-57-க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆ. தனபாலசிங்கம்
கௌரவ செயலாளர்

ஆனைப்பந்தி
21-8-57.




# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 1—9—57 —— 7—9—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

தேககசுகம் இன்னமும் தொடர்ந்து சிக்கலாகவேயிருக்கும். வயிற்றுக்கோளாறுகளுக்கிடமுண்டு. உமக்குச் சுயாதீனம் இருக்கமாட்டாது. கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. ஞாயிறும் திங்கள் முற்பகலும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும்.

**இடபராசி கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,**

திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் தவிர ஒரு அளவுக்கு நல்ல வாரம். சிறு குடும்பக் குழப்பங்களும் உத்தியோக தொந்தரவுகளுமிருக்கும். புதுக் கருமங்களுக்கு வாரமிகுதி நன்றாயிருக்கும்,

**மிதுனராசி மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்,**

புதுக்கருமங்களுக்கு முன் அரைவாரம் நல்லாயிருக்கும், உம்முடைய முயற்சிகளை நீர் வசதியாக ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருக்கும். தன லாபமும் நிச்சயம், ஆனல் வியாழம் வெள்ளி சனி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும்,

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

நண்பர்கள் இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு. யாரையும் விரைந்து நம்பவேண்டாம். கருமங்கள் தொடர்ந்து குழப்பமாகவேயிருக்கும். சுகவீனங்களுக்குமிடமுண்டு. கடைசி நாளைக் கவனமாய்க கழிக்கவும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,**

பணத்துறையில் நல்ல வாரம். நீர் இடைஞ்சல்களை நீக்கக்கூடியதாயிருக்கும், ஆனல் சுகவீனங்களுக்கிடமுண்டு. இனத்தவர்களும் உமககுச் சில இடைஞ்சல்களை உண்டாக்கக்கூடும்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உம்முடைய மனம் இந்தவாரம் அமைதியாயிருக்கமாட்டாது. நீர் இந்தவாரம் அதிக எதிர்ப்பையும் கண்டனங்களையும் முன்னிடுவீர். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

உமக்கு இந்தவாரம் மனச்சமாதானம் இருக்கமாட்டாது. நியாயம் இல்லாமல் நீர் குறைசொல்லப்படுவீர். இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. தேககசுகம் விசேட கவனம் கொடுக்கப்படுதல் வேண்டும்,

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவியாயிருப்பர். தனலாபங்களும் சமுக முன்னேற்றமும் நிச்சயம். வார இறுதிக்கு முன் உம்முடைய [illegible] கல்கள் நீக்கப்படும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

நடைமுறைகளில் இந்தவாரம் சில மாற்றங்களுக் கிடமுண்டு. வரவு செலவைச் சமாளிக்க நீர் வருத்தப்படுவீர். இழிமொழி பரப்புவோர் உம்மை இடைஞ்சல்களுக்குள்ளாக்கக் கூடும். வார இறுதியிற் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ப் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

நெருக்கடி சிறிது குறையும். சிறிது தொந்தரவுடன் நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக் கூடியதாயிருக்கும். பணத்துறையில் நல்லவாரம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

நீர் இந்தவாரம் சில கண்டனங்களை முன்னிடவேண்டி வரும். ஆனல் நீர் உம்முடைய எதிரிகளை வெல்லுதல் நிச்சயம். ஆரம்ப இடையூறுகளின்பின் உம்முடைய முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

குடும்பச் சூழலில் இந்த வாரம் சண்டைகளுக் கிடமுண்டு. இழிமொழி பரப்புவோரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். உத்தியோகத்துறையில் [illegible] சித்தியாகும்,

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 30-8-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org